# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2018 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2018.05.18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தம்)

***2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 73.00** **தபாற் செலவு : ரூபா 25.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பரஉதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்வதுடன், மாற்றீடுசெய்யப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பின்வருவனவற்றிற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்புடைமையை விரிவாக்குவதாகும்–

(அ) குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தலில் அக்கறையுடைய இலங்கையின் திறத்தவர் ஒருவராக ஆகியுள்ள சர்வதேச அல்லது பிராந்திய சமவாயமொன்றிற்கு அல்லது வேறு சர்வதேச உடன்படிக்கைக்கு திறத்தவர்களாகவுள்ள நாடுகள்;

(ஆ) குற்றவியல் கருமங்களில் பரஸ்பரஉதவியளித்தலுக்காக இலங்கையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளநாடு ஒன்று;

(இ) அமைச்சர், அது இறைமையுள்ளதேசியங்களின் மிகச் சிறந்த அக்கறைகளுக்கானதாக உள்ளதென தீர்மானிக்கின்றவிடத்து இலங்கையுடன் ஏதேனும் உடன்படிக்கையை செய்திராத நாடொன்று;

(ஈ) சர்வதேச குற்றவியல் கருமங்களை எதிர்ப்பதுடன் இணைந்துள்ள ஒழுங்கமைப்பு ஒன்று.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைமாற்றீடுசெய்வதுடன் மாற்றீடு செய்யப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, குறிக்கோள்களை விசாலிப்பதற்கும் உதவியை மட்டுப்படுத்தாமலிருப்பதற்குமாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்வதுடன் மாற்றீடு செய்யப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டத்தின் வினைத்திறனான நிருவாகத்தை ஏற்பாடு செய்வதற்குமாகும். மேலும் இவ்வாசகமானது மத்திய அதிகாரியின் கடமைகள் மற்றும் பணிகளை குறித்துரைப்பதற்கு முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 4அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன் மாற்றீடு செய்யப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, கோரிக்கையொன்றின் விண்ணப்பமொன்றுடன் தொடர்பான நடவடிக்கைமுறையை குறித்துரைப்பதாகும். மேலும் இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 5அ மற்றும் 5ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன் சொல்லப்பட்ட பிரிவுகளின் சட்டப்பயனானது கோரிக்கைகளுக்கான உடனடிப் பதிவையும் தகவலை தன்னிச்சையாக அனுப்புதலையும் ஏற்பாடுசெய்வதற்குமாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இலங்கையில் குற்றவியல் புலனாய்வுகள் அல்லது வழக்கு நடவடிக்கைகள் தொடங்கியுள்ள சந்தர்ப்பங்களை உள்ளடக்குவதன்மூலம் உதவியை மறுத்தலுக்கான ஏதுக்களை விசாலிப்பதற்குமாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 6அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது. புதிய பிரிவானது, போற்றிக் காக்கப்படவேண்டிய அந்தரங்கத் தன்மையை ஏற்பாடுசெய்வதற்காகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்ட வாறான பிரிவின் சட்டப்பயனானது, ஆளொருவரின் ஆளடையாளம் அறியப்படாதவிடத்து உதவி பற்றிய நடவடிக்கைமுறையை உள்ளடக்குவதற்கும், நேர்காணுவதற்கும் கூற்றொன்றை பதிவதற்கும் தத்துவத்தைக் கொண்டுள்ள அதிகாரிகளை குறித்துரைப்பதற்குமாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, நீதிவான் நீதிமன்றத்திற்கு ஆவணம் ஒன்றை அல்லது வேறு மன்றாணையை அனுப்புவதில் மத்திய அதிகாரிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தற்றுணிபை நீக்குவதற்குமாகும்.

**வாசகம் 10** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சான்றைஎடுத்தல் அல்லது ஆவணங்கள் அல்லது பொருட்களை பெறுதல் பற்றிய செய்முறையை துரிதப்படுத்துவதற்குமாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன் மாற்றீடுசெய்யப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, புலனாய்வுக்கான சான்று பற்றிய மூலங்களை விசாலிப்பதற்குமாகும்.

**வாசகம் 12** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, மத்திய அதிகாரியினால் ஆக்கப்பட்ட கட்டளைகளுக்கு நிச்சயத்தன்மையை வழங்குவதற்குமாகும்.

**வாசகம் 13** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, கைதிகள் தொடர்பில் மத்திய அதிகாரியினால் ஆக்கப்பட்ட கட்டளைகளுக்கு நிச்சயத்தன்மையை வழங்குவதற்குமாகும்.

**வாசகம் 14** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ மற்றும் 13ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகிறது. புதிய பிரிவுகளானது ஒளியுரு கலந்துரையாடல் தொழில்நுட்பவியலை வசதிப்படுத்தலையும் மற்றும் கூட்டுப் புலனாய்வுகளையும் ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 15** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் Vஅ என்னும் புதிய பாகம் ஒன்றை உட்புகுத்துகின்றது. புதிய பாகமானது, வெளிநாட்டு பகிரங்க அலுவலர்கள் அல்லது பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்புகளின் அலுவலர்களின் இலஞ்சம் பற்றிய கண்டுபிடிப்புகள் தொடர்பான உதவியை ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 16** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன் மாற்றீடுசெய்யப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஆளொருவரை அடையாளம் காணுதற்கும், கண்டுபிடிப்பதற்கும் அல்லது ஆதனத்தின் பெறுமதியை மதிப்பிடுவதில் உதவுதற்காக உதவியை வழங்குவதற்கு இயைபான சட்டவலுவுறுத்தல் அதிகாரியை பணிப்பதற்குமாகும்.

**வாசகம் 17** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, குற்றவியலுடன் தொடர்புபட்ட கருமங்களை உள்ளடக்குவதற்கு ஏற்புடைமையை நீடிப்பதற்குமாகும்.

**வாசகம் 18** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கு VIIஅ என்னும் புதிய பாகமொன்றை உட்புகுத்துகின்றது. புதிய பாகமானது, கணினிவழிக் குற்றங்கள் தொடர்பாக தேக்கிவைக்கப்பட்ட தரவின் துரிதப்படுத்தப்பட்ட பேணிக்காப்பை ஏற்பாடுசெய்வதற்காகும்.

**வாசகம் 19** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 21அ மற்றும் 21ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றது. புதிய பிரிவுகளானது, உதவி வழங்குவதில் இரு சார்புத்தன்மை மற்றும் பரஸ்பரத் தன்மை பற்றிய நெறிகளையும் ஆங்கில மொழியில் கோரிக்கைகளை பெறுவதையும் ஏற்பாடு செய்வதற்காகும்.

**வாசகம் 20** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன் மாற்றீடுசெய்யப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றைச் செய்வதற்காகும்-

(அ) "பொதுநலவாயநாடு" மற்றும் "பொதுநலவாயம் சாராநாடு" போன்ற சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணத்தை நீக்குதல்;

(ஆ) "தோதானஅதிகாரி" மற்றும் "குற்றவியல் கருமம்" போன்ற சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணத்தை திருத்துதல்; அத்துடன்

(இ) "ப்ளொக்சைன் தொழில்நுட்பவியல்", "தகுதிவாய்ந்தஅதிகாரி", "கணினித் தரவு", "கணினிமுறைமை", "கட்டுப்படுத்தப்பட்டதொழிற்பாடு", "நாடு" அல்லது "வெளிநாட்டு அரசு", "எண்மமுறை நாணயம்", "ஆவணம்", "வெளிநாட்டு பகிரங்க அலுவலர்", "முடக்குதல்", "அமைச்சர்", "பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் அலுவலர்", "குற்றச் செயலினாலானவரும்படிகள்", "ஆதனம்", "பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பு" மற்றும் "போக்குவரத்துத் தரவு" போன்ற சொல்லமைப்புகளுக்கான புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துதல்.

**வாசகம் 21** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கம், குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் தொடர்பான ஏதேனும் வேறு எழுத்திலான சட்டம், ஏதேனும் அறிவித்தல், அறிவிப்பு, ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது வேறு ஆவணத்தைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, "குறித்துரைக்கப்பட்ட நாடு" என்பதனை குறித்துரைக்கப்பட்ட நாடு மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பு "என்பதாக பொருள்படுவதனை பொருளமைத்துக்கொள்வதற்கு சட்டத்தின் ஏற்புடைமையை நீடிப்பதாகும்.

**வாசகம் 22** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையை மாற்றீடுசெய்வதுடன் மாற்றீடுசெய்யப்பட்டவாறான அட்டவணையின் சட்டப்பயனானது, பரஸ்பர உதவியளித்தல் கோரிக்கைகளுக்காக புதிய பொதுப்படிவம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்குமாகும்.

## குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தம்)

ச.வ.-ஓ 67/2016

**2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“சட்டத்தின் ஏற்புடைமை.

2. (1) அமைச்சர் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்மீதும் பரஸ்பரமான தன்மையின் உறுதிப்பாட்டின்மீதும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையதாகுதல் வேண்டும் என வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் வெளிப்படுத்தலாம்-

(அ) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரான தேதியிலும் சரி அல்லது பின்னரான தேதியிலும் சரி, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தலிலான அக்கறையைக் கொண்டுள்ளதும் இலங்கை திறத்தவர் ஒருவராக ஆகியுள்ளதுமான சர்வதேச அல்லது பிராந்திய சமவாயமொன்றின் அல்லது வேறு உடன்படிக்கையின் திறத்தவர் ஒருவராகவுள்ள ஒவ்வொரு நாடு;

(ஆ) குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தலுக்காக இலங்கையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள நாடொன்று;

(இ) இலங்கை உதவியை அளித்து பெற்றுக் கொள்வதானது இறைமை கொண்டுள்ள தேசியங்களின் மிகச்சிறந்த அக்கறைகளுக்கானதாக உள்ளதென அமைச்சர் தீர்மானிக்கின்றவிடத்து, இலங்கையுடன் ஏதேனும் உடன்படிக்கையை செய்திராத நாடு ஒன்று;

(ஈ) சர்வதேச குற்றவியல் கருமங்களை எதிர்ப்பதுடன் இணைந்துள்ள ஒழுங்கமைப்பொன்று.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், எந்த உடன்படிக்கையின் விளைவாக அது ஆக்கப்பட்டதோ அந்த உடன்படிக்கையின் நியதிகள் எவையேனும் இருப்பின், அவற்றை எடுத்தியம்புதல் வேண்டும். அத்தகைய கட்டளை, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன் எந்த உடன்படிக்கையின் விளைவாக அது ஆக்கப்பட்டதோ அந்த உடன்படிக்கை வலுவிலிருக்கும் வரை அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக அல்லது அத்தகைய காலப்பகுதிக்கு வலுவிலிருத்தலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கென அதன்முன்னர்

கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக் கப்படாத ஏதேனும்கட்டளை, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கட்டளையொன்று எத்தேதியன்று ஒழிக்கப்படு கின்றதோ அத்தேதிபற்றிய அறிவித்தலொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(5) கட்டளையொன்று எந்த நாடு அல்லது ஒழுங்கமைப்பு தொடர்பில் ஆக்கப்படுகிறதோ மற்றும் அப்போதைக்கு வலுவிலுள்ளதோ அந்த ஒவ்வொரு நாடும் அல்லது ஒழுங்கமைப்பும், இதனகத்துப்பின்னர் "குறித்துரைக்கப்பட்ட நாடு அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"சட்டத்தின் குறிக்கோள்.*

3. (1) இச்சட்டத்தின் குறிக்கோள், பின்வருவன உள்ளடங்கலாக குற்றவியல் மற்றும் தொடர்புபட்ட கருமங்களில் இலங்கையினால் உதவியளிக்கப்படு வதனையும் உதவி பெறப்படுவதனையும் வசதிப்படுத்துவதற்காகும்:-

(அ) சாட்சிகளை அல்லது சந்தேக நபர்களை கண்டுபிடித்தல் மற்றும் அடையாளங் காணுதல்;

(ஆ) ஆவணங்களை சேர்ப்பித்தல்;

(இ) சாட்சிகளை அல்லது சந்தேகிக்கப்பட்ட ஆட்களை விசாரணை செய்தல் மற்றும் நேர்காணல்;

(ஈ) சான்று, ஆவணங்கள், வேறு பொருட்கள் அல்லது தகவலை வழங்குதல் மற்றும் பெறுதல்;

(உ) தேடுகைக்கும் கைப்பற்றுகைக்குமான கோரிக்கைகளை நிறைவேற்றுதல்;

(ஊ) சாட்சியொருவராகத் தோன்றுவதற்கு கட்டுக்காப்பில் உள்ள ஆளொருவரின் தற்காலிக இடமாற்றத்தைப் பயனுறுத்துதல்;

(எ) சாட்சிகள் நேரடியாகத் தோன்றுவதனை வசதிப்படுத்துதல்;

(ஏ) பதிப்புரிமை மீறுகை உள்ளடங்கலாக புலமைச் சொத்தின் குற்றவியல் மீறுகை;

(ஐ) ஏதேனும் குற்றவியல் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட கணினி முறைமையொன்றின் அல்லது வேறு ஏதேனும் ஆதனத்தின் அமைவிடம் தொடர்பான தகவலை அனுப்புதல்;

(ஒ) குற்றப்பணங்களைச் செலுத்துவதற்காக எவையேனும்கட்டளைகளை வலுவுறுத்துதல்;

(ஓ) அத்தகைய கருமங்கள் மீது இயைபான சட்டங்களைப் பின்பற்றி ஆதனத்தை இழப்பித்தல் அல்லது முடக்குதல்;

(ஔ) எவையேனும் எண்மமுறை நாணயங்களிலான வியாபாரம் உள்ளடங்கலாக, இணையம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், க்ளவுட் கணிப்பு, ப்ளொக்சைன் தொழில்நுட்பவியல் மற்றும் வேறு கணினி வலையமைப்புக்களினூடாக புரியப்பட்ட குற்றங்களைக் கண்டறிதல்;

(க) எவரேனும் வெளிநாட்டு பகிரங்க அலுவலர் அல்லது பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப் பொன்றின் அலுவலர் மற்றும் அவர்களின் முறையான பதிலிகளுக்கும் பயனுகரிகளுக் கும் இலஞ்சம் கொடுத்தல்;

(ங) தேக்கிவைக்கப்பட்ட கணினித் தரவின் துரிதப்படுத்தப்பட்ட பேணிக்காப்பு மற்றும் பேணிக்காக்கப்பட்ட போக்குவரத்துத் தரவினதும் தடுத்துவைக்கப்பட்ட தரவினதும் துரிதப்படுத்தப்பட்ட வெளிவிடுகை;

(ச) குற்றவியல் செயற்பாடொன்றின் வரும்படிகளைக் கண்டுபிடித்தல்;

(ஞ) நீதிமுறை வழக்கு நடவடிக்கையொன்றில் ஏல்தகவுடையதாக்குவதற்கு குறிப்பிட்ட அதிகாரமளிப்பினூடாக குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் பெறப்பட்ட ஆவணச் சான்றைப் பயன்படுத்துதல்; அத்துடன்

(ட) ஒளியுரு கலந்துரையாடல் தொழில்நுட்பவியலூடாக குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலிருந்து பெறப்பட்ட சான்றின் ஏல்தகவுடைமை மற்றும் ஏற்புடைமை.

(2) இச்சட்டத்தில் எதுவும், நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அரசுகள் அல்லது ஒழுங்கமைப்புகளுடனான குற்றவியல் கருமங்களுடன் சம்பந்தப்பட்ட புலனாய்வுக்காக உதவியின் வேறு ஏதேனும்வடிவம் அல்லது தன்மையை வழங்குதலை தடைசெய்தலாகாது. அத்தகைய உதவி பல்வேறு தேடுபொறிகளைப் பயன்படுத்தல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை கைமாற்றுதல் உள்ளடங்கலாக கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்பாடுகள், கூட்டுப் புலனாய்வுகள் மற்றும் வேறு விசேட புலனாய்வுசார் தொழில்நுட்பங்களை பயன்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கலாம்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவுகள் இடப்படுகின்றன:-

*“இச்சட்டத்தை மத்திய அதிகாரி நிருவகித்தல்.*

4. (1) அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர், (இதனகத்துப்பின்னர் “மத்திய அதிகாரி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மத்திய அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

(2) மத்திய அதிகாரியானவர், இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, மத்திய அதிகாரியின் சார்பாக செயலாற்றுவதற்கு எழுத்தில் சிரேட்ட உதவிச் செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள எவரேனும் வேறு அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம்.

(3) மத்திய அதிகாரி தகுதிவாய்ந்த அதிகாரிகளை பெயர்குறித்தல் வேண்டும்; அவர்கள் மத்திய அதிகாரியினால் பணிக்கப்பட்டவாறாக கோரிக்கைகளுக்கான தகவல்களை செய்முறைப்படுத்துதல் வேண்டும்.

(4) மத்திய அதிகாரி, இலங்கையில் இல்லாமை, சுகவீனம் அல்லது தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டமை காரணமாக அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அமைச்சர், அத்தகைய இயலாமையிலிருந்து மூன்று நாட்களினுள், சட்டத்தை நிருவகிப்பதற்கு சிரேட்ட உதவிச் செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள அலுவலர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

*மத்திய அதிகாரியின் கடமைகள் மற்றும் பணிகள்.*

4அ. மத்திய அதிகாரி-

(அ) அவசியமானவாறாக அத்தகைய வேறு உருவகங்கள் அல்லது ஆட்களின் உதவியுடன் சேர்த்து எல்லாக் கோரிக்கைகள் தொடர்பிலும் உடனடி நடவடிக்கையை உறுதிப்படுத்துவதற்கு எல்லா நியாயமான நடபடிகளை எடுத்தல் வேண்டும்;

(ஆ) ஐந்தாம் பிரிவின்கீழ் பெறப்பட்ட கோரிக்கையொன்றை அவசியமான தகவல் அல்லது உதவியை வழங்குவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவருக்கு நெறிப்படுத்தலாம்;

(இ) அவசரமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதை முன்னுரிமைப்படுத்தல் வேண்டும்;

(ஈ) இயைபான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிகாரிகளின் தொடர்பு விபரங்களைப் பேணுதல் வேண்டும்;

(உ) உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் கோரிக்கைகளை முகாமை செய்வதற்கான முறையான முறைமையொன்றைப் பேணுவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட அலகொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஊ) சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிப்பதற்கு வழிகாட்டுநெறிகள் மற்றும் சுற்றறிக்கைகளை வழங்கலாம்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவுகள் இடப்படுகின்றன:-

*“குறித்துரைக்கப்பட்ட நாடொன்றினால் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் செய்யப்பட்ட விண்ணப்பம்.*

5. (1) விண்ணப்பமொன்று, இச்சட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய குற்றவியல் மற்றும் தொடர்புபட்ட கருமங்கள் தொடர்பில் தகவல் அல்லது உதவியைக் கோரி குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரியினால் மத்திய அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய தகவல் அந்நாட்டினுள் அல்லது அந்நாட்டின் வெளியே குற்றவியல் செயற்பாடொன்றை தடுப்பதற்கு, கண்டுபிடிப்பதற்கு, புலனாய்வு செய்வதற்கு அல்லது அது தொடர்பில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்குப் பெறப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பமானது, இதற்கான அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் பொருளளவில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் 5அ என்னும் பிரிவின் கீழ் உடனடி நடவடிக்கையை இயலச் செய்வதற்கு மத்திய அதிகாரியினால் அந்நோக்கத்துக்காக குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய ஆவணங்களுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இசைந்தொழுகும் கோரிக்கை ஒன்று, குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரியினூடாக இயைபான தகுதிவாய்ந்த அதிகாரிக்கு நேரடியாக இலத்திரனியல் வழிவகைகளினூடாக அனுப்பி வைக்கப்படலாம். அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரி (4) ஆம் உட்பிரிவுக்கு அமைய, அத்தகைய கோரிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உடனடியாக முற்படுதல் வேண்டும்.

(4) கோரிக்கையொன்று (3) ஆம் உட்பிரிவின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவருக்கு நேரடியாக செய்யப்படுகின்றவிடத்து, சொல்லப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி, இயைபான கோரிக்கையின் பிரதியொன்றை அனுப்பிவைத்தல் மூலம் மத்திய அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(5) மத்திய அதிகாரியினால் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட கோரிக்கையொன்றின் மீதான உதவி அல்லது தகவல்–

(அ) மத்திய அதிகாரியினால்; அல்லது

(ஆ) இயைபான தகுதிவாய்ந்த அதிகாரியினால்

நேரடியாக குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி, செய்யப்பட்ட முன்னேற்றம்பற்றி அல்லது கோரிக்கையின் நிறைவு பற்றி மத்திய அதிகாரிக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(6) மத்திய அதிகாரியானவர், குறித்துரைக்கப் பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரியிடமிருந்து நேரடியாக கோரிக்கையொன்றைப் பெறவில்லை என்ற ஏதுக்களின் மீது, இலங்கையில் உள்ள நீதிமன்றம் எதுவும் அத்தகைய கோரிக்கையை நிராகரிக்கக்கூடாது.

கோரிக்கைகளுக்கான உடனடிப் பதில்.

5அ. (1) மத்திய அதிகாரி, கோரிக்கை ஒன்றைப் பெறுவதன்மீது இயன்றளவு விரைவாக ஒன்றில் அங்கீகரிக்கலாம், பகுதியளவில் அங்கீகரிக்கலாம், அவசியமானவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய அங்கீகரிக்கலாம், பின்போடலாம் அல்லது அத்தகைய கோரிக்கையை மறுக்கலாம்.

(2) கோரிக்கை ஒன்றைப் பெறுவதன்மேல் மத்திய அதிகாரி உடனடியாக-

(அ) கோரிக்கை தொடர்பில் தகவலை செய்முறைப்படுத்துவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரியைப் பணித்தல் வேண்டும்;

(ஆ) (i) காரணங்களுடன் கோரிக்கையை நிறைவேற்றுதலின் விளைவு பற்றியும்;

(ii) கோரிக்கையை நிறைவேற்றுவதை இயன்றதல்லாததாக்குகின்ற அல்லது அதனை குறிப்பிடத்தக்க முறையில் தாமதப்படுத்தக்கூடியனவான எவையேனும் காரணங்கள் பற்றியும்,

குறித்துரைக்கப்பட்ட நாட்டின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

*தகவலை தன்னிச்சையாக அனுப்புதல்.*

5ஆ. இச்சட்டத்தில் உள்ள எதுவும், பரஸ்பரமான தன்மையை உறுதிப்படுத்துவதன்மீதும் அந்தரங்கத் தன்மையின் நோக்கங்களுக்காக அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின்மீதும், குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரி ஒருவருக்கு குற்றவியல் கருமம் ஒன்று தொடர்பாக கோரப்பட்ட தகவலை தன்னிச்சையாக அனுப்புவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரைத் பணிப்பதிலிருந்து மத்திய அதிகாரியை தடை செய்தலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி இடப்படுகின்றது:-

"(ஈ) தவறொன்று தொடர்பில் அல்லது அத்தவறாக அமைந்த அதே செயலினால் அல்லது செய்யாமையினால் புரியப்பட்ட இன்னொரு தவறு தொடர்பில்-

(i) இலங்கையில் குற்றவியல் புலனாய்வுகள் அல்லது வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ள விடத்து; அல்லது

(ii) இலங்கையின் சட்டங்களுக்கு இணங்க ஆள் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து,

குற்றவியல் கருமம் ஒன்றுடன் சம்பந்தப்பட்ட அத்தகைய ஆளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுத்தல் தொடர்பானதான கோரிக்கையொன்றாகவிருப்பின்;".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**7**. பின்வரும் புதிய பிரிவு, முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

"அந்தரங்கத் தன்மை.

6அ. (1) நான்காம் பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வோர் அலுவலரும், எல்லாக் கருமங்களையும் கண்டிப்பாக அந்தரங்கமானவையாகக் கருதுதல் வேண்டும்.

(2) சட்டத்தினால் வேறுவகையாக அதிகாரமளிக்கப்பட்டாலேயொழிய, தமது அலுவலகமுறையான ஆற்றல் அல்லது பதவி காரணமாகவும் கோரிக்கையின் அந்தரங்கத்தன்மை பற்றி அறிந்திருக்கின்றவரும்-

(அ) இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட கோரிக்கையின் உள்ளீடுகள் பற்றியும்;

(ஆ) அத்தகைய கோரிக்கை செய்யப்பட்டுள்ளது அல்லது செய்யப்படவுள்ளது என்ற நிகழ்வு பற்றியும்; அல்லது

(இ) அத்தகைய கோரிக்கை அனுமதிக்கப்பட்டுள்ளது அல்லது மறுக்கப்பட்டுள்ளது என்ற நிகழ்வு பற்றியும்,

அறிந்துள்ளவருமான ஆளொருவர், வெளிவிடுகையானது வெளிநாட்டு கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அவசியமாக உள்ளது என்ற அளவு வரை தவிர அத்தகைய உள்ளீட்டை அல்லது நிகழ்வுகளை வெளிவிடுதல் ஆகாது.

(3) கோரிக்கையொன்றிற்கு இணங்கியொழுக வென, அந்தரங்கத் தன்மையானது (2) ஆம் உட் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு போற்றிக்காப் பதற்கு முடியாதிருப்பின், மத்திய அதிகாரிக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மத்திய அதிகாரி அதன்பின்னர் குறித்துரைக்கப்பட்ட நாடு ஒன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்; எவ்வாறா யினும் கோரிக்கையானது நிறைவேற்றப்படுதல் வேண்டுமா என்பதை அது அப்போது தீர்மானித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவுடன் இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், இணங்கியொழுகாமையின் தன்மை மற்றும் பாரதூரமான தன்மையைக் கவனத்திற் கொண்டு ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சும் குற்றப்பணம் ஒன்றிற்கு மாகாண மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது ஆளாதலும் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய குற்றப்பணம், ஏதேனும் கொடுக்கப்பட்ட வழக்கில் ஐந்து மில்லியன் ரூபாவான பணத்தொகை யொன்றை விஞ்சுதலாகாது.

(5) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, குற்றவியல் கருமம் ஒன்றுடன் தொடர்பான தகவலுக்கான கோரிக்கையொன்று, கோரும் ஆளின் மெய்த் தன்மையை உறுதிப்படுத்தியதன்பின்னர் அனுமதிக் கப்படலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) இரண்டாம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம்:-

"(2) இலங்கையில் உள்ள குற்றவியல் நீதிமன்ற மொன்றின் நியாயாதிக்கத்தினுள் ஏதேனும் குற்றவியல் கருமத்தில் சம்பந்தப்பட்டுள்ளவரெனச் சந்தேகிக்கப்படுகின்றவரும் அல்லது சான்று அல்லது உதவி அளிப்பதற்கு இயன்றவராகவிருக்கின்றவருமான ஆளொருவர்–

(அ) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் உள்ளவரென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, மத்திய அதிகாரி அவரது விருப்பாற்றலில் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரின் கோரிக்கையின்மீது அத்தகைய ஆளைக் கண்டுபிடிப்பதில் உதவியளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலுள்ள அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரியைக் கோருதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆளின் ஆளடையாளம் அறியப்படாதிருப்பின், மத்திய அதிகாரி, அவரது தற்றுணிபில் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரின் கோரிக்கையின் மீது அத்தகைய ஆளுடன் சம்பந்தப்பட்டவர்கள் என நம்பப்பட்ட அத்தகைய ஆட்களை–

(i) நேர்காணுவதற்கு;

(ii) அவர்களின் கூற்றுக்களை பதிவதற்கு;

(iii) ஆவணங்களை அல்லது பொருட்களை, அவர்களிடமிருந்து பெறுவதற்கு,

குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றின் தோதான அதிகாரியைக் கோரலாம்

என்பதுடன் அத்தகைய தகவலை மத்திய அதிகாரிக்கு அனுப்பலாம். மத்திய அதிகாரி அவசியமானவிடத்து, அதனை இயைபான தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும். பெறப்பட்ட ஆவணங்கள் அல்லது பொருட்கள் தோதான அதிகாரியினால் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப்பின்னர், பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம்:-

"(4) பத்தாம் மற்றும் 21 ஆம் பிரிவுகளுக்கு அமைய (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக ஆளொருவரை நேர்காணல் மற்றும் அவரின் கூற்றொன்றைப் பதிதல், இலங்கையில் உள்ள சட்ட வலுவுறுத்தல் அதிகாரி அல்லது தோதான அதிகாரி ஒருவரினால் குறித்தளிக்கப்படக்கூடியவாறான சட்ட வலுவுறுத்தல் அதிகாரி ஒருவர் அல்லது சொல்லப்பட்ட சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளின் இணைந்த குழுவொன்றினால் செய்யப்படுதல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:-

"ஆட்களைக் கண்டுபிடித்தல் மற்றும் அடையாளம் காணுதலுடன் தொடர்பான பரஸ்பர உதவி.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) மத்திய அதிகாரி குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றின் தோதான அதிகாரியிடமிருந்தான கோரிக்கையொன்றை-

(அ) அந்நாட்டில் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் ஓர் எதிராளியாகத் தோன்றுவதற்கு அல்லது ஒரு சாட்சியாக வருகைதருவதற்கு ஆளொருவரைத் தேவைப் படுத்துகின்ற அழைப்பாணையொன்றை அல்லது வேறு மன்றாணையை;

(ஆ) அந்நாட்டில் குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற நீதிமன்றமொன்றினால் வழங்கப் பட்டதும், அந்நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் செய்யப்பட்ட நீதிமன்ற முடிபொன்றைப் பதிந்துள்ளதுமான ஆவணமொன்றை,

சேர்ப்பிப்பதற்காக அங்கீகரிக்கின்றவிடத்து, மத்திய அதிகாரி, அத்தகைய ஆள் இலங்கையில் உள்ள எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வசிக்கின்றாரோ இலங்கையிலுள்ள அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அந்நீதிமன்றத்தின் முடிபுடன் சேர்த்து சேர்ப்பித்தலுக்காக அத்தகைய கோரிக்கையை உடனடியாக அனுப்புதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் குற்றவியல் கருமமொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கையொன்றின் நோக்கங்களுக்காக-" என்பதிலிருந்து அப்பந்தியின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பில் குற்றவியல் கருமமொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கையொன்றின் நோக்கங்களுக்காக-

(அ) இலங்கையில் சான்றெடுக்கப்பட வேண்டுமென்று; அல்லது

(ஆ) இலங்கையில் உள்ள ஆவணங்கள் அல்லது வேறு பொருட்கள் காண்பிக்கப்பட வேண்டுமென்று,

குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரி மத்திய அதிகாரிக்கு கோரிக்கையொன்றை விடுக்குமிடத்து, மத்திய அதிகாரி, அத்தகைய சான்றை எடுப்பதற்கு அல்லது அத்தகைய ஆவணங்களை அல்லது பொருள்களைப் பெறுவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவருக்கு அல்லது அவசியமானவிடத்து, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தின் பிரதான நீதிவானுக்கு அத்தகைய கோரிக்கையை உடனடியாக ஆற்றுப்படுத்தல் வேண்டும் என்பதுடன் விடயத்திற்கேற்ப அத்தகைய நீதிவான் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து அத்தகைய சான்று, ஆவணங்கள் அல்லது பொருட்களைப் பெறுவதன்மேல் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரிக்கு அவற்றை அனுப்புதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"குறித்துரைக் கப்பட்ட நாடொன்றில் அல்லது குறித்துரைக் கப்பட்ட ஒழுங்கமைப்பில் சான்றெடுக்கப் படுவதற்காகவும் ஆவணங்கள் முதலியன காண்பிக்கப் படுவதற்காகவும் மத்திய அதிகாரியினால் விடுவிக்கப்படும் கோரிக்கை.*

11. (1) மத்திய அதிகாரி, நீதிமன்றமொன்றின் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரின் கோரிக்கையின் மீது, குற்றவியல் கருமமொன்றை புலனாய்வு செய்தல் மற்றும் குற்றவியல் கருமத்தின் வழக்குநடவடிக்கை நோக்கங்களுக்காக-

(அ) கணினிச் சான்று உள்ளடங்கலாக சான்றெடுக்கப்படுவதற்காக;

(ஆ) புலனாய்வுசார் பொருள் காண்பிக்கப்படுவதற்காக;

(இ) வங்கிக்கூற்று காண்பிக்கப்படுவதற்காக; அத்துடன்

(ஈ) வேறு எவையேனும் ஆவணங்கள் அல்லது வேறு பொருள்கள் காண்பிக்கப்படுவதற் காக,

ஒழுங்கேற்பாடுசெய்வதற்கு, குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங் கமைப்பின் தோதான அதிகாரியைக் கோரலாம்.

(2) மத்திய அதிகாரி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரினால் செய்யப்பட்ட கோரிக்கையொன்றுக்கு பதிலளித்தலாக குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பில் உள்ள தோதான அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட-

(அ) எடுக்கப்பட்ட ஏதேனும் சான்றைப் பெறுகின்றவிடத்தும் அத்தகைய சான்று கணினிச் சான்றுடன் தொடர்பான தாகவிருக்கின்றவிடத்தும்,எவரேனும் நீதிமுறை அதிகாரி அல்லது தோதான அதிகாரியினால் உண்மைப்பிரதி ஒன்றாக சான்றுப்படுத்துகின்றதுமான அத்தகைய சான்று;

(ஆ) 21 ஆம் பிரிவின்கீழ் உரியமுறையில் மெய்யென உறுதிப்படுத்தப்பட்ட அத்த கைய குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப் பில் காண்பிக்கப்பட்ட புலனாய்வுசார் பொருள், காண்பிக்கப்பட்ட வங்கிக் கூற்றுக் கள், வேறு ஏதேனும் ஆவணம் அல்லது வேறு பொருளைப் பெறுகின்றவிடத்து;

அது, அத்தகைய கோரிக்கை எந்த வழக்கு நடவடிக்கை தொடர்பானதோ அந்த ஏதேனும் வழக்கு நடவடிக் கையில் ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் பெறப்பட்ட ஏதேனும் தகவல், அத்தகைய தோதான அதிகாரியின் எழுத்திலான சம்மதம் இன்றி அத்தகைய கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட குற்றவியல் கருமம் தவிர்ந்த ஏதேனும் நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுதல் ஆகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் "அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்:- என்னும் சொற்களுக்குப் பதிலாக "போதிய அதிகாரவளிப்பாதல் வேண்டும்-" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் ''வைத்திருப்பதனை அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''வைத்திருக்கப்படுவதற்கு போதிய அதிகாரவளிப்பாதல் வேண்டும்-'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 13அ மற்றும் 13ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**14.** பின்வரும் புதிய பிரிவுகள், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவினை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப் படுவதுடன், அச்சட்டவாக்கத்தின் 13அ மற்றும் 13ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"ஒளியுரு கலந்துரையாடல் தொழில்நுட்பவியலை வசதிப்படுத்துதல்.*

13அ. நீதிமன்றமொன்று அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி, இச்சட்டத்தின்கீழ் ஆளொருவரை அல்லது பொருளை அல்லது வேறு ஏதேனும் வடிவிலான உதவியை அடையாளம்காணுவதற்காக வாய்மொழி மூலச்சான்று அவசியமானது எனக் கருதுகின்றவிடத்து, அத்தகைய நீதிமன்றம் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி, வெளிநாட்டு அரசொன்றில் நேரடியாக சமுகமளித்துள்ளவரும் இலங்கையில் உள்ள நீதிமன்றத்திற்கு வருகைதருவதற்கு இயலாதவராக உள்ளவருமான சாட்சியொருவரிடமிருந்து விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய

முறையில் சான்றைப் பெறுவதற்கு கட்புல அல்லது செவிப்புல கடத்துகைத் தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தலாம். கேட்பானது, நேரடியாக நீதிமுறை அலுவலர் ஒருவரினால் அல்லது சட்ட வலுவுறுத்தல் அலுவலரினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுப் புலனாய்வுகள்.

13ஆ. பலநாடுகளில் உள்ள ஆட்கள் அல்லது ஆதனம் சம்பந்தமான தவறொன்று புரியப்படுகின்றவிடத்து, கோரிக்கையொன்று செய்யப்படுகின்றபோது மத்திய அதிகாரி, இலங்கை மற்றும் எவையேனும் குறித்துரைக்கப்பட்ட நாடுகளிலிருந்தான அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளிலிருந்தான புலனாய்வாளர்களைக் கொண்டு, கூட்டுப் புலனாய்வொன்றை நிலைநாட்டுவதற்கு ஏற்பாடுகளை வசதிப்படுத்துதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் Vஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

**15**. பின்வரும் புதிய பாகம், (14அ என்னும் பிரிவு மற்றும் 14ஆ என்னும் பிரிவு) முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவினை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் Vஅ என்னும் பாகமாக பயனுறுதலும் வேண்டும்:-

## “பாகம் Vஅ

## வெளிநாட்டு பகிரங்க அலுவலர் அல்லது பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பின் அலுவலரின் இலஞ்சம் பற்றிய கண்டுபிடிப்புகள் தொடர்பான உதவி

வெளிநாட்டு அலுவலர் ஒருவரின் இலஞ்சம் பற்றி அடையாளம் காணல் முதலியவற்றுக்காக

14அ. குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரி ஒருவர், வெளிநாட்டு பகிரங்க அலுவலர் ஒருவர் அல்லது பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் அலுவலர் ஒருவர் இலஞ்சத்துடன் சம்பந்தப்பட்டுள்ளார் என நம்புவதற்கு நியாயமான

*குறித்துரைக்கப் பட்ட நாடொன்று அல்லது குறித்துரைக்கப் பட்ட ஒழுங்கமைப் பினாலான கோரிக்கை.*

ஏதுக்களைக் கொண்டு கோரிக்கையொன்றைச் செய்கின்றவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் சொல்லப்பட்ட அலுவலரை அடையாளம் காணு வதற்கென அல்லது கண்டுபிடிப்பதற்கென அல்லது சொல்லப்பட்ட வெளிநாட்டு அலுவலர், அவரது பதிலிகள் மற்றும் பயனுகரிகள் தொடர்பாக இலஞ்சத்தின் வரும்படிகளின் பெறுமதியை மதிப்பிடுவதற்கெனவும் கண்டுபிடிப்பதற்கெனவும் ஏற்புடையதாதல் வேண்டும்.

*வெளிநாட்டு அலுவலர் ஒருவரின் இலஞ்சம் பற்றி அடையாளம் காணல் முதலியனவற்றுக் காக இலங்கையினா லான கோரிக்கை.*

14ஆ. வெளிநாட்டு பகிரங்க அலுவலர் ஒருவர் அல்லது பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் அலுவலர் ஒருவர் சம்பந்தப்பட்ட, (26ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளது என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றவிடத்து, மத்திய அதிகாரி, அத்தகைய அலுவலரை அடையாளம் காணவும் கண்டுபிடிக்கவும் அத்துடன் சொல்லப்பட்ட வெளிநாட்டு அலுவலர், அவரது பதிலிகள் மற்றும் பயனுகரிகள் தொடர்பாக இலஞ்சத்தின் வரும்படிகளின் பெறுமதியை மதிப்பிடுவதற்கும் கண்டுபிடிப்பதற்கும் அத்தகைய வெளிநாட்டு அலுவலர் வதிபவராகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரியைக் கோரலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.*

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"குற்றச் செயலினாலான வரும்படிகளை கண்டறிவதற்காக குறித்துரைக்கப் பட்ட நாடு ஒன்று அல்லது குறித்*

17. (அ) ஆளொருவர் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் பாரதூரமான தவ றொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட் டுள்ளவிடத்து அல்லது குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது

*துரைக்கப்பட்ட ஒழுங்கமைப் பினாலான கோரிக்கை.*

அதனைப் புரிந்துள்ளார் என்ற நியாயமான ஏதுக்களின்மீது சந்தேகிக் கப்படுமிடத்து;

(ஆ) அத்தவறைப் புரிந்ததினின்று நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ பெறப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் ஆதனம் இலங்கையிலுள்ளதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்தும்,

தோதான அதிகாரி மத்திய அதிகாரியிடமிருந்து உதவியைக் கோருகின்றவிடத்தும், மத்திய அதிகாரி, ஆளொருவரை அடையாளம்காணுவதற்கு அல்லது கண்டுபிடிப்பதற்கு அல்லது ஆதனத்தின் பெறுமதியை மதிப்பிடுவதில் உதவுவதற்காக உதவியை வழங்குவதற்கு இயைபான சட்ட வலுவுறுத்தல் அதிகாரியைக் கோரலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "குற்றவியல் கருமம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குற்றவியல் அல்லது தொடர்புபட்ட கருமம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் VIIஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**18**. பின்வரும் புதிய பாகம் (20அ என்னும் பிரிவிலிருந்து 20ஊ என்னும் பிரிவு வரை) முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் VIIஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும்.

"பாகம் VIIஅ

## கணினி வழிக் குற்றங்கள் தொடர்பான தேக்கிவைக்கப்பட்ட தரவின் துரிதப்படுத்தப்பட்ட பேணிக்காப்பு

*அமைச்சொன்றின் இயைபான செயலாளர் தரவைப் பேணிக் காப்பதற்கு கட்டளையை ஆக்குதல்.*

20அ. தேக்கிவைக்கப்பட்ட கணினித் தரவு அல்லது போக்குவரத்துத் தரவின் துரிதப் படுத்தப்பட்ட பேணிக்காப்பு தேவைப்படுத்தப்படுகின்றது என மத்திய அதிகாரி அபிப்பிராயப்படுமிடத்து, மத்திய அதிகாரி, 20ஆ என்னும் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்காக விடயத் திற்கேற்ப தேக்கிவைக்கப்பட்ட கணினித் தரவு அல்லது போக்குவரத்துத் தரவு அல்லது அத்தகைய இரண்டு தரவினதும் துரிதப்படுத்தப்பட்ட பேணிக் காப்புக்காக அப்பொருள்பட கட்டளையொன்றை ஆக்கும்படி இயைபான விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

*தரவைப் பேணிக்காத்தலின் காலப்பகுதி.*

20ஆ. இருபது அ என்னும் பிரிவின்கீழ் எந்தத் தரவுக்காக கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த எல்லாத் தரவுகளும், குறைந்தபட்சம் ஆறு ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்றிற்கு பேணிக்காக்கப்படுதல் வேண்டும்.

*பேணிக் காக்கும் விதம்.*

20இ. (1) இப்பாகத்தின்கீழ் பேணிக்காக்கப்பட்ட தரவின் பதிவேடுகள், தகவலுக்கான கோரிக்கை எந்தப் படிவத்தில் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தப் படிவத்தில் நிறுவனம் ஒன்று கோரிக்கைக்கு உடனடியாக இணங்கியொழுக இயலச்செய்யும் முறையொன்றிலும் படிவத்திலும் பேணப்படுதல் வேண்டும்.

(2) பதிவேட்டின் பிரதியொன்று -

(அ) அதன் அச்சுப் பிரதியொன்றை வசதியான முறையில் பெறுவதற்கு

பொறியில் வாசிக்கத்தக்க படிவத்தில் வைத்திருக்கப்படலாம்;

(ஆ) வாசிக்கத்தக்க பிரதியொன்று உடனடியாக பெற்றுக்கொள்ளப்படுவதனை இயலச்செய்வதற்கு இலத்திரனியல் படிவத்தில் வைத்திருக்கப்படலாம் என்பதுடன் பதிவேடுகளை வைத்திருக்கும் ஆளின் இலத்திரனியல் கையொப்பமொன்று சரிபார்த்தல் நோக்கங்களுக்காக உட்புகுத்தவும்படலாம்;

(இ) அவசியமானவிடத்து, தேக்கிவைக்கப்பட்ட கணினித் தரவின் முடக்குதலை உட்படுத்தலாம்;

(ஈ) அவசியம் எனின் நாளதுவரையாக்கலாம்.

பேணிக் காக்கப்பட்ட தரவை வெளிவிடுதல்.

*20ஈ.* (1) பேணிக்காக்கப்பட்ட தரவு, விண்ணப்பமொன்றில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்காக தோதான அதிகாரியினால் உரியமுறையில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, குற்றவியல் புலனாய்வு அல்லது நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளின் நோக்கத்துக்காக வெளிவிடப்படுதல் வேண்டும்.

(2) இருபது அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், 20ஆ என்னும் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறுவதன்மீது அல்லது விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறுவதன்மீது காலம்கழிந்ததாதல் வேண்டும்.

(3) குறிப்பிட்ட தொடர்பாடல் ஒன்று சம்பந்தமான போக்குவரத்துத் தரவை பேணிக்காப்பதற்கு கோரிக்கையொன்றை அனுமதிக்கும்போது, சேவை

வழங்குநர் ஒருவர் இன்னொரு நாட்டில் தொடர் பாடலை கடத்துவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என மத்திய அதிகாரிக்கு அறிவிக்கப்படுகின்றவிடத்து, மத்திய அதிகாரி, காண்பிப்பதற்கான கோரிக்கை பெறப்படுவதற்கு முன்னர் சேவை வழங்குநரையும் தொடர்பாடலானது எவ்வழியினூடாக கடத்தப் பட்டதோ அவ்வழியையும் அடையாளம் காண்பதற்கு போதியதாக உள்ளவாறான அத்தகைய போக்கு வரத்துத் தரவின் அளவை வெளிவிடுவதற்கு இயைபான தகுதிவாய்ந்த அதிகாரியை அறிவுறுத் துதல் வேண்டும்.

தேக்கி வைக்கப்பட்ட கணினித் தரவைக் காண்பித்தல்.

20உ. (1) கணினித் தரவின் ஏல்தகைமையின்மீது ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அமையவும் இச்சட்டத்தின் VI ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குற்றவியல் கருமத்தைப் புலனாய்வு செய்வதற்கு கணினித் தரவு அல்லது தகவலுக்காக குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரியொருவரின் கோரிக்கையின் மேல், நீதிவான் -

(அ) கணினி முறைமையொன்றில் அல்லது கணினித் தரவு தேக்க ஊடகமொன்றில் தேக்கிவைக்கப்பட்ட, ஆளொருவரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள குறித்துரைக்கப்பட்ட கணினித் தரவை; அத்துடன்

(ஆ) சேவை வழங்குநர் ஒருவரின் உடைமையில் அல்லது கட்டுக்காப்பில் உள்ள அவசிய மான ஒப்பப்பணம் செலுத்துநர் பற்றிய தகவலை,

காண்பிப்பதை இயலச் செய்வதற்கு கட்டளை யொன்றை வழங்கலாம்.

கணினித் தரவை தேடுகையிடல் மற்றும் கைப்பற்றுதல்.

20ஊ. (1) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பின் தோதான அதிகாரியொருவரினாலான கோரிக்கையின்மேல், ஏதேனும் கணினி முறைமையையும் அல்லது அதன் பாகத்தையும் எந்த கணினித் தரவு தேக்க ஊடகத்தில் கணினித்தரவு தேக்கிவைக்கப்படலாமோ அந்த ஏதேனும் கணினித்தரவு தேக்க ஊடகத்தையும் தேடுகையிடுவதற்கு அல்லது வேறுவகையாக அணுகுவதற்கு ஏற்றமாற்றங்களுடன் 15 ஆம் பிரிவின்கீழ் ஆணைப்பத்திரமொன்று வழங்கப்படலாம்.

(2) எந்த நீதிவானின் நியாயாதிக்கத்தினுள் அத்தகைய கணினி அல்லது கணினி முறைமை அமைந்துள்ளதென நம்பப்படுகின்றதோ அந்த நீதிவானினால் வழங்கப்பட்ட தேடுகை ஆணைப் பத்திரம், அவசியமானவிடத்து பின்வருவனவற்றைச் செய்வதற்கு பொலிசு அலுவலருக்கு அல்லது வேறு எவரேனும் பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்கு அதிகாரமளிக்கலாம் -

(அ) கணினி முறைமையொன்றை அல்லது அதன் பாகத்தை அல்லது கணினித் தரவு தேக்க ஊடகமொன்றை கைப்பற்றுதல் அல்லது வேறுவகையாகப் பெறுதல்;

(ஆ) அக்கணினித் தரவின் பிரதியொன்றை ஆக்குதல் மற்றும் வைத்திருத்தல்;

(இ) இயைபான தேக்கிவைக்கப்பட்ட கணினித்தரவின் ஒருமைப்பாட்டைப் பேணுதல்; அத்துடன்

(ஈ) அணுகப்பட்ட கணினிமுறைமையில் உள்ள அக்கணினித் தரவை அணுகத்தக்கதல்லாததாக்குதல் அல்லது அதனை அகற்றுதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 21அ மற்றும் 21ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**19.** பின்வரும் புதிய பிரிவுகள், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவினை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப் படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் முறையே 21அ மற்றும் 21ஆ என்னும் பிரிவுகளாக பயனுறுதலும் வேண்டும்:-

"இருசார்புத் தன்மை மற்றும் பரஸ்பரத் தன்மை பற்றிய நெறிகள்.

21அ. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இருசார்புத் தன்மை மற்றும் பரஸ்பரத்தன்மை பற்றிய நெறிகள், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் போற்றிக்காக்கப்படுதல் வேண்டும்.

மொழி.

21ஆ. இச்சட்டத்தின்கீழ், உதவிக்கான கோரிக்கை மற்றும் சேர்த்தனுப்பப்படும் ஆவணங்கள் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"பொருள் கோடல்.

24. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலேயொழிய-

"தோதான அதிகாரி" என்பது-

(அ) குறித்துரைக்கப்பட்ட நாடொன்று தொடர்பில், எவ்வாறாக விவரிக்கப்படினும், குற்றவியல் கருமங்களில் அந்நாட்டின் ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் உதவியளிக்கப் படுவதற்கான கோரிக்கைகளைப் பெறுவதற்கும் அனுப்புவதற்குமென குறித்தொதுக்கப்பட்ட ஆள் எனப் பொருள்படும்;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பு ஒன்று தொடர்பில், எவ்வாறாக விவரிக்கப்படினும் குற்றவியல் கருமங்களில் உதவியளிக்கப்படுவதற்கான கோரிக்கைகளைப் பெறுவதற்கும் அனுப்புவதற்குமென குறித்தொதுக்கப்பட்ட ஆள் எனப் பொருள்படும்;

“ப்ளொக்சைன் தொழில்நுட்பவியல்” என்பது, பகிரங்கமானதாக அல்லது தனிப்பட்டதாக அவசியமான அனுமதியுடன் அல்லது அனுமதியின்றி அல்லது குறியீட்டாக்க பொருளியலால் உந்தப்பட்ட அல்லது குறியீட்டாக்க பொருளியலால் உந்தப்படாத விநியோகிக்கப்பட்ட, பன்முகப்படுத்தப்பட்ட பகிரப்பட்ட மற்றும் பிரதிசெய்யப்பட்ட பேரேட்டை பயன்படுத்துகின்ற விநியோகிக்கப்பட்ட பேரேட்டுத் தொழில்நுட்பவியல் எனப் பொருள்படும். பேரேட்டில் உள்ள தரவு குறியீட்டாக்கத்தினால் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மாற்ற முடியாமலும் கணக்காய்வுக்குட்படுத்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும் அத்துடன் உண்மையான தகவலை வழங்குதலும் வேண்டும்;

“தகுதிவாய்ந்த அதிகாரி” என்பது, சட்ட வலுவுறுத்தல் அதிகாரி ஒருவரையும் உள்ளடக்குகிறது.

“கணினித் தரவு” என்பது, பணியொன்றைப் புரிவதற்கு கணினி முறைமையொன்றை ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான செய்நிரல் ஒன்று

உள்ளடங்கலாக கணினியொன்றில் செய்முறைப்படுத்துவதற்கு பொருத்தமான வடிவமொன்றில் உள்ள நிகழ்வுகள், தகவல் அல்லது கருத்துக்களின் ஏதேனும் உருவமைப்பு எனப் பொருள்படும்;

“கணினி முறைமை” என்பது, 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினி வழிக் குற்றச் சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்பாடு” என்பது-

(அ) சட்ட வலுவுறுத்தல் அலுவலர்களின் பங்குபற்றுகையை உள்ளடக்குகின்ற;

(ஆ) (i) பாரதூரமான தவறொன்றுக்காக ஆளொருவருக்கு எதிராக குற்றவழக்குக் தொடுப்பதற்கு இட்டுச் செல்லக்கூடிய சான்றைப் பெறும்;

(ii) குற்றவியல் செயற்பாட்டில் அல்லது ஊழல் நடத்தையில் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆளைக் கைதுசெய்யும்;

(iii) குற்றவியல் செயற்பாட்டை அல்லது ஊழல் நடத்தையை இடையிட்டுத் தடுக்கும்;

(iv) ஒராம், (ii) அல்லது (iii) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நோக்கத்தின் எய்துகைக்கு வசதியளிப்பதற்கு நியாய மானமுறையில் அவசிய மாகவுள்ள செயற்பா டொன்றை நிறைவேற்றும்;

நோக்கங்களுக்காக நடாத்தப்படுகின்ற,

(இ) அத்தகைய நடத்தை இலங்கையில் தவறொன்றாக அமைகின்ற விடத்து சட்ட வலுவுறுத்தல் அலுவலர் ஒருவர் அல்லது வேறு எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் மேற்பார்வையை உள் ளடக்கும்.

தொழிற்பாடொன்றை உள்ளடக்குகிறது.

“நாடு” அல்லது “வெளிநாட்டு அரசு” என்பது, குடியேற்றம் ஒன்று, ஆள்புலம், அத்த கைய நாட்டின் அல்லது வெளிநாட்டு அரசின் பாதுகாப்பகம் அல்லது வேறு சார்பு நாடு அல்லது அத்தகைய நாடு அல்லது வெளிநாட்டு அரசில் பதிவு செய்யப்பட்ட கப்பல் ஒன்று அல்லது வானூர்தியொன்று என்பவற்றை உள்ளடக்குகின்றது என்பதுடன் சீன மக்கள் குடியரசின் ஹொங்கொங் விசேட நிருவாகப் பிராந்தியத்தை உள்ளடக்கு வதாகக் கருதப்படுதலும் வேண்டும்;

“குற்றவியல் கருமம்” என்பது-

(அ) குற்றவியல் தவறொன்றுடன் தொடர்பான ஏதேனும் சட்டத்தை மீறுதல்; அத்துடன்

(ஆ) குற்றவியல் தவறொன்று தொடர்பான புலனாய்வு ஒன்று, குற்றவழக்கு அல்லது நீதிமுறையான வழக்கு நடவடிக்கைகள்,

எனப் பொருள்படும். அத்துடன் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது-

(i) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அல்லது குற்றத்தீர்ப்பளிக்காததன் அடிப்படையில் ஏதேனும் ஆதனத்தை அல்லது குற்றச் செயலினாலான வரும்படிகளை இழப்பித்தல் அல்லது பறிமுதல் செய்தல்;

(ii) பணவகையான தண்டமொன்றை விதித்தல் அல்லது அறவிடுதல்;

(iii) இழப்பிக்கக்கூடியவாறான அல்லது பறிமுதல் செய்யக்கூடியவாறான ஆதனத்தை கண்டறிதல், முடக்குதல் மற்றும் கட்டுப்படுத்தல்;

“எண்ம முறை நாணயம்” என்பது-

(அ) (i) பரிமாற்று ஊடகமொன்றாக, கணக்கு அலகாக அல்லது பெறுமதியின் களஞ்சியமாக பயன்படுத்தப்படுகின்ற; அத்துடன்

(ii) சட்டமுறையான பணத்தில் பெயர் குறிக்கப்படாத,

பெறுமதியின் எண்ம முறை உருவமைப்பொன்றை உள் ளடக்குகிறது; அத்துடன்

(ஆ) (i) எந்தக் கொடுக்கல்வாங்கலொன்றில் சட்டமுறையான பணம், வங்கி வரவு அல்லது எண்மமுறை நாணயத்துக்கு வணிகரிடமிருந்து எடுக்கப்பட முடியாத அல்லது பரிமாற்றப்பட முடியாத பெறுமதியை ஒன்றிணை வொன்றின் அல்லது வெகுமதி நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக வணிகர் ஒருவர் வழங்குகின்றாரோ அந்த கொடுக்கல்வாங்கல் ஒன்று; அல்லது

(ii) வெளியீட்டாளர் ஒருவரினால் அல் லது அவர் சார்பாக வெளியிடப் பட்டதும் அதே வெளியீட்டாளரி னால் விற்கப்பட்ட தொடரிணை விளையாட்டொன்று, விளையாட்டு மேடை அல்லது விளையாட்டுக்கள் தொகுதியினுள் மட்டும் பயன்படுத்தப் பட்டதும் அல்லது அதே விளை யாட்டு மேடையின்மேல் முனையப் பட்டதுமான பெறுமதியின் எண்ம முறை உருவமைப்பொன்றை,

உள்ளடக்காது.

"ஆவணம்" என்பது-

(அ) பின்வரும் பொருட்களின் ஏதேனும் ஒன்றை அல்லது ஏதேனும் ஒன்றின் ஏதேனும் பாகத்தை உள்ளடக்கு கிறது-

(i) எந்தக் கடதாசியில் அல்லது வேறு பொருளில் எழுத்து காணப்படுகின்றதோ அந்த ஏதேனும் கடதாசி அல்லது வேறு பொருள்;

(ii) தேசப்படம் ஒன்று, வரை படம், வரைதல், புகைப்படம் அல்லது அதனை ஒத்த பொருள்;

(iii) எந்தக் கடதாசியில் அல்லது வேறு பொருளில் குறிகள், எண்கள், அடையாளங்கள் அல்லது துளைகள் என்பவற்றை பொருள்கொள்ளும் தகைமையுடைய ஆட்களுக்கு அவை கருத்தைத் தருகின்றதோ அந்த ஏதேனும் கடதாசி அல்லது வேறு பொருள்;

(iv) வேறு ஏதேனும் உருப்படியின் அல்லது உபாயத்தின் உதவியுடனோ அல்லது உதவியின்றியோ எந்த உருப்படியிலிருந்து அல்லது பொருளிலிருந்து ஒலிகளை, உருவங்களை அல்லது எழுத்துக்களை உண்டுபண்ண இயலுமானதாகவுள்ளதோ அந்த ஏதேனும் உருப்படி அல்லது பொருள்;

(v) எந்த உருப்படியின் மீது தகவல், ஒன்றில் பொறி முறைவகையாக அல்லது

இலத்திரனியல் வகையாக தேக்கிவைக்கப்பட்டுள்ளதோ அல்லது பதியப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் உருப்படி;

(vi) வேறு ஏதேனும் தகவல் பதிவேடு; அல்லது

(ஆ) அத்தகைய பொருளொன்றின் ஏதேனும் பிரதி, மீள் உற்பத்தி அல்லது இணைப்பிரதி; அல்லது

(இ) அத்தகைய பிரதியொன்றின், மீள் உற்பத்தியின் அல்லது இணைப் பிரதியின் ஏதேனும் பாகம்;

"உரியமுறையில் மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்டது" என்பது, ஆவணமொன்று தொடர்பில் 21 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மெய்யென உறுதிப் படுத்தப்பட்ட ஓர் ஆவணம் என்று பொருள்படும்;

"வெளிநாட்டுச் சட்ட விடுபாட்டுரிமைச் சான்றிதழ்" என்பது, அந்த குறித்துரைக்கப்பட்ட நாட்டின் சட்டத்தின்கீழ் பொதுவாக அல்லது குறிப்பாக குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்கள் ஒன்றில் பொதுவாக அல்லது குறித்துரைக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் அல்லது ஒன்றில் பொதுவாக அல்லது குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் குறித்துரைக்கப்பட்ட வினாவொன்றுக்கு விடையளிக்குமாறு அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆவணமொன்றை முன்வைக்குமாறு தேவைப் படுத்தப்படக்கூடும் அல்லது தேவைப்

படுத்தப்பட முடியாது என சான்றுப் படுத்தி அல்லது வெளிப்படுத்தி குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரியால் அல்லது குறித்துரைக்கப் பட்ட நாடொன்றின் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒரு சான்றிதழ் அல்லது செய்யப்படும் ஒரு வெளிப்படுத்துகை என்று பொருள்படும்;

"வெளிநாட்டு பகிரங்க அலுவலர்" என்பது-

(அ) வெளிநாட்டு அரசாங்க குழுவொன்றின் ஊழியர் ஒருவர் அல்லது அலுவலர்; அல்லது

(ஆ) ஒப்பந்தம் ஒன்றின் கீழ் வெளிநாட்டு அரசாங்க குழுவொன்றுக்காக பணிபுரிகின்ற தனியாள் ஒருவர்; அல்லது

(இ) வெளிநாட்டு அரசொன்றின் சட்டமொன்றின் கீழ் அல்லது வெளிநாட்டு அரசொன்றின் பாகத்தின் சட்டமொன்றின் கீழ் நியமனமொன்று, பதவி அல்லது உத்தியோகமொன்றின் கடமைகளைக் கொண்டிருக்கின்ற அல்லது புரிகின்ற தனியாள் ஒருவர்; அல்லது

(ஈ) வெளிநாட்டு அரசொன்றின் அல்லது வெளிநாட்டு அரசொன்றின் பாகத்தின் வழக்காறு அல்லது சமவாயத்தினால் உருவாக்கப்பட்ட அவரது நியமனம், பதவி அல்லது உத்தியோகத்தின் கடமைகளைக் கொண்டுள்ள அல்லது புரிகின்ற தனியாள் ஒருவர்; அல்லது

(உ) இராணுவப் படையொன்றின் அல்லது பொலிசுப் படையின் உறுப்பினரொருவரான சேவை உட்பட வேறு வகையான வெளிநாட்டு அரசாங்கக் குழுவொன்றின் சேவையில் உள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஊ) வெளிநாட்டு அரசொன்றின் அல்லது வெளிநாட்டு அரசொன்றின் பாகத்தின் நிறைவேற்றுத்துறை, நீதித்துறை அல்லது நீதிவான் அலுவலகத்தின் உறுப்பினரொருவர்; அல்லது

(எ) வெளிநாட்டு அரசொன்றின் அல்லது வெளிநாட்டு அரசொன்றின் பாகத்தின் சட்டவாக்கத்துறையின் உறுப்பினரொருவர் அல்லது அலுவலர்; அல்லது

(ஏ) (i) மேலேயுள்ள பந்திகளின் எவற்றினாலும் மேவப்பட்ட வெளிநாட்டு பகிரங்க அலுவலர் ஒருவரின் அதிகாரமளிக்கப்பட்ட இடைத்தரகர் ஒருவராகவுள்ள; அல்லது

(ii) மேலுள்ள பந்திகளின் எவற்றினாலும் மேவப்பட்ட வெளிநாட்டு பகிரங்க அலுவலர் ஒருவரின் அதிகாரமளிக்கப்பட்ட இடைத்தரகராக அவரை அல்லது அவளை காட்டி நிற்கின்ற,

தனியாள் ஒருவர் எனப் பொருள்படும்.

"முடக்குதல்" என்பது, தோதான அதிகாரி அல்லது நீதிமன்றமொன்றினால் தொடங்கப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையிலும் அந்நடவடிக்கையின் காலஎல்லைக்காகவும் ஆதனம், எவையேனும் சொத்துக்கள் அல்லது கணினித் தரவின் கைமாற்றுதல், மாற்றுதல், கையுதிர்ப்பு அல்லது அசைவை தடைசெய்தல் எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரை அல்லது 44 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட, எந்த அமைச்சருக்கு நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்;

"பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் அலுவலர்" என்பது-

(அ) பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் ஊழியர் ஒருவர்; அல்லது

(ஆ) ஒப்பந்தம் ஒன்றின் கீழ் பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றுக்காக பணிபுரிகின்ற தனியாள்; அல்லது

(இ) பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றில் பதவி ஒன்று அல்லது உத்தியோகத்தின் கடமைகளைக் கொண்டிருக்கின்ற அல்லது புரிகின்ற தனியாள் ஒருவர்; அல்லது

(ஈ) வேறுவகையாக பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் சேவையில் உள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(உ) (i) மேலேயுள்ள பந்திகளின் எவற்றினாலும் மேவப்பட்ட பகிரங்க சர்வதேச ஒழுங் கமைப்பொன்றின் அலுவலர் ஒருவரின் அதிகாரமளிக் கப்பட்ட இடைத்தரகர் ஒருவ ராகவுள்ள; அல்லது

(ii) மேலேயுள்ள பந்திகளின் எவற் றினாலும் மேவப்பட்ட பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன் றின் அலுவலர் ஒருவரின் அதிகாரமளிக்கப்பட்ட இடைத் தரகராக அவரை அல்லது அவளை காட்டி நிற்கின்ற,

தனியாள் ஒருவர் எனப் பொருள்படும்.

‘‘குற்றச்செயலினாலான வரும்படிகள்” என்பது, குற்றவியல் செயல் ஒன்றைப் புரிவதன் விளைவாக அல்லது விட்டுவிடு கையின் விளைவாக நேரடியாகவோ நேரடியாகவல்லாமலோ முழுமையாக அல்லது பகுதியளவில் பெறப்பட்ட, பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது தேறிப் பெறப்பட்ட ஏதேனும் ஆதனம், நன்மை அல்லது அனுகூலத்தை உள்ளடக்கு கின்றது;

“ஆதனம்” என்பது, ஏதேனும் நாணயம் எனப் பொருள்படும் என்பதுடன், பருப்பொரு ளாயினும்சரி பருப்பொருளற்றதாயினும்

சரி, அசையும் அல்லது அசையாத அருவமான அல்லது உருவமான, இலங்கையில் இருப்பினும் சரி அல்லது வேறெங்காயினும் இருப்பினும்சரி எவ்வகையினதுமான ஏதேனும் சொத்தையும் வங்கி வரவுகள், பயணிகள் காசோலைகள், வங்கிக் காசோலைகள், காசுக் கட்டளைகள், பங்குகள், பிணையங்கள், பிணைப்பத்திரங்கள், வரைவுகள், கடன் பத்திரங்கள் உள்ளடங்கலாக, ஆயின் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் அத்தகைய சொத்துக்களுக்கான உரித்தை அல்லது அவற்றிலான அக்கறையை சான்றுப்படுத்தி, இலத்திரனியல் அல்லது எண்ம வடிவம் உட்பட எத்தகையனவுமான ஏதேனும் வடிவத்தில் உள்ள சட்ட ஆவணங்கள் அல்லது சாதனங்களையும் உள்ளடக்குகின்றது அத்துடன் அத்தகைய ஏதேனும் ஆதனத்திலுள்ள ஏதேனும் சட்டரீதியான அல்லது ஒப்புரவான அக்கறையையும் உள்ளடக்குகின்றது;

"பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பு" என்பது-

(அ) (i) எந்த ஒழுங்கமைப்பொன்றில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளின் அரசாங்கங்கள் உறுப்பினர்களாகவுள்ளனரோ அந்த ஒழுங்கமைப்பொன்று; அல்லது

(ii) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளின் அரசாங்கங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆட்களினால் அமைத்துருவாக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்று; அல்லது

(ஆ) (i) எந்த ஒழுங்கமைப்புகளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளின் அரசாங்கங்கள் உறுப்பினர்களாகவுள்ளனரோ அந்த ஒழுங்கமைப்புகளினால்; அல்லது

(ii) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளின் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளின் அரசாங்கங்களின் பிரதிநிதிகளினால் அமைத்துருவாக்கப்பட்ட ஒழுங்கமைப்புகளினால், தாபிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்று அல்லது அமைத்துருவாக்கப்பட்ட ஒழுங்கமைப்புகள் குழுவொன்று; அல்லது

(இ) (i) பந்தி (அ) அல்லது (ஆ) இல் விவரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றின் உறுப்பொன்றாகவுள்ள அல்லது ஒழுங்கமைப்பினுள்ளான அலுவலகமொன்றாகவுள்ள; அல்லது

(ii) அவ்வாறு விவரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றினால் அல்லது அத்தகைய உறுப்பொன்றினால் தாபிக்கப்பட்ட ஆணைக் குழுவொன்று, பேரவை அல்லது வேறு குழுவாகவுள்ள; அல்லது

(iii) பந்தி (அ) அல்லது (ஆ) இல் விவரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்றின் அல்லது அத்தகைய உறுப்பொன்று, பேரவை அல்லது குழுவின் குழுவொன்று அல்லது குழுவொன்றின் உபகுழுவாகவுள்ள,

ஒழுங்கமைப்பொன்று எனப்பொருள்படும்;

"பாரதூரமான தவறு" என்பது, மரண தண்டனையால் அல்லது ஓராண்டிற்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு மறியற்றண்டனையால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்று எனப் பொருள்படும்; அத்துடன்

"போக்குவரத்துத் தரவு" என்பது, 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச்சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

**21.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் தொடர்பான ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்திலும்,"குறித்துரைக்கப்பட்ட நாடு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "குறித்துரைக்கப்பட்ட நாடு அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" எனப் பதிலிடப்படுதல் வேண்டும். பொதுவான திருத்தம்.

(2) குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் தொடர்பான ஏதேனும் அறிவித்தல், அறிவிப்பு, ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது வேறு ஆவணத்தில், “குறித்துரைக்கப் பட்ட நாடு” என்பதற்கான ஒவ்வொரு குறிப்பீடும், “குறித்துரைக் கப்பட்ட நாடு அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பு” என்பதற்கான குறிப்பீடு ஒன்றாக வாசிக்கப்பட்டு பொருளமைத் துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத் துக்கான அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

22. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை இடப்படு கின்றது:-

“**அட்டவணை** [பிரிவு 5 (2)]

**பரஸ்பர உதவியளித்தல் கோரிக்கைப் படிவம்-இலங்கை மத்திய அதிகாரிக்கு**

1. **நாடு அல்லது ஒழுங்கமைப்பின் பெயர் :** ..........................
2. **தோதான அதிகாரியின் விபரங்கள் :**
    - 2.1 பெயர் :
    - 2.2 தலையங்கம் அல்லது பணி :......................................
    - 2.3 அமைச்சு, நிறுவனம் அல்லது திணைக்களம் :....................
    - 2.4 முகவரி :............................................................
    - 2.5 தொலைபேசி :........................................................
    - 2.6 தொலைநகல் :........................................................
    - 2.7 மின்னஞ்சல் :........................................................
    - 2.8 இணையத்தளம் :....................................................
3. **கோரிக்கையின் சட்ட அடிப்படை:**
    - **3.1 கோரிக்கையின் சட்ட அடிப்படையைக் குறிப்பிடவும்:***

      ☐ சர்வதேச அல்லது பிராந்திய சமவாயம் (குறித்துரைக்கவும்)
      ......................................................................

      ☐ உடன்படிக்கை (குறித்துரைக்கவும்)
      ......................................................................

      ☐ ஒழுங்கமைப்பு (குறித்துரைக்கவும்)
      ......................................................................

      ☐ வேறு (குறித்துரைக்கவும்)
      ......................................................................

      * இயைபான பெட்டியில் (“✓”) எனக் குறியிடவும்

***3.2*** **பரஸ்பரமான தன்மை பற்றிய கூற்று**: [இடம் போதியதற்றதாக விருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................

***3.3*** **சமவாயம் அல்லது உடன்படிக்கையின்கீழ் தேவைப்படுத்தப் பட்ட வேறு ஏதேனும் மேலதிக தகவல்**: [இடம் போதியதற்ற தாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................

***4.*** **உதவி வகை**:

***4.1*** **உதவி வகையைக் குறிப்பிடவும்**:*

☐ சந்தேகநபர்கள்/சாட்சி/வேறு ஆளைக் கண்டுபிடித்தல் மற்றும் அடையாளம் காணுதல்

☐ சான்று, ஆவணங்கள், வேறு பொருட்கள் அல்லது தகவலைப் பெறுவதற்கான ஒழுங்கேற்பாடு

☐ அழைப்புக் கட்டளைகளை சேர்ப்பித்தல்

☐ சான்றை வழங்கும் நோக்கங்களுக்காக கைதி அல்லது சாட்சியை நீக்குவதற்கான ஒழுங்கேற்பாடு

☐ தேடுகை மற்றும் கைப்பற்றுகைக்காக தேடுதல் ஆணைப் பத்திரம் ஒன்றை வழங்குவதற்கான ஒழுங்கேற்பாடு

☐ கட்டளைகளை வலுவுக்குட்படுத்தல்

☐ ஆதனத்தை இழப்பித்தல் அல்லது முடக்குதல்

☐ ஆதனத்தின் பெறுமதியை கண்டுபிடித்தல், அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பிடுதல்

☐ கணினித் தரவு அல்லது போக்குவரத்துத் தரவின் துரிதப் படுத்தப்பட்ட பேணிக்காப்பு

☐ பேணிக்காக்கப்பட்ட தரவை வெளிவிடுதல்

☐ வேறு (குறித்துரைக்கவும்) ..........................................

* இயைபான பெட்டியில் (பெட்டிகளில்) ("✓") எனக் குறியிடவும்

***4.2*** **முக்கியமான தகவலின் முழு விவரணம்**: [இடம் போதியதற்ற தாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................

5. **இயைபான தகுதிவாய்ந்த அதிகாரி :**

5.1 **இயைபான தகுதிவாய்ந்த அதிகாரியின் வகுதியைக் குறிப்பிடவும்:***

☐ சட்ட வலுவுறுத்தல் அல்லது புலனாய்வு செய்யும் அதிகாரி
☐ குற்றவழக்கு தொடுக்கும் அதிகாரி

☐ நீதிமுறை அதிகாரி
☐ வேறு (குறித்துரைக்கவும்) ........................................
* இயைபான பெட்டியில் (பெட்டிகளில்) ("✓") எனக் குறியிடவும்

5.2 **இயைபான தகுதிவாய்ந்த அதிகாரியின் (பணிகள் முக்கியமான பொறுப்புக்கள் மற்றும் தொடர்பு விபரங்கள் உள்ளடங்கலாக) பெயர் மற்றும் வேறு இயைபான விபரங்களை வழங்கவும்:** [இடம் போதியதற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................

6. **முன்னைய தொடர்புகள்:**
**இலங்கையில் எவரேனும் ஆளுக்கு அல்லது தோதான அதிகாரிக்கு செய்யப்பட்ட இக்கோரிக்கை சம்பந்தமான முன்னைய தொடர்புகளின் விபரங்களை வழங்கவும்:** [இடம் போதிய தற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................

7. **தவறுகள் பற்றிய நிரல்:**
**பின்வரும் தவறு (கள்) பற்றிய விபரங்களை வழங்கவும்:** [இடம் போதியதற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]

7.1 **தவறு:**
...........................................................................
...........................................................................
...........................................................................
...........................................................................

**7.1.1 தவறு தொடர்பான தேசிய சட்டவாக்கம் (சட்டவாக்கங்கள்) பற்றிய விபரங்கள்:**

…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….

**7.1.2 இயைபான ஏற்பாடுகள்:**

…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….

**7.1.3 தவறுக்கான அதிகபட்ச தண்டங்கள்:**

…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….
…………………………………………………………………………….

**8. ஆள் (ஆட்கள்) பற்றிய விபரங்கள்:**

**8.1 சந்தேக நபர்கள்/ தவறாளர்கள்:**

*அறியப்பட்டிருப்பின், முழுப்பெயர், மறுபெயர்கள், பால், முகவரி(கள்), பிறந்த திகதி, பிறந்த இடம், பிறப்பின் போதான தேசிய இனம், கடவுச்சீட்டு இலக்கம் மற்றும் அமைவிடம், பிரசாவுரிமை(கள்), மொழி(கள்) முதலியன உள்ளடங்கலாக கோரிக்கையின் விடயமாகவுள்ள ஆள் அல்லது ஆட்களின் அடையாளம் காணல் பற்றிய தகவல்களை வழங்கவும். [இடம் போதியதற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]*

…………………………………………………………………….
…………………………………………………………………….
…………………………………………………………………….
…………………………………………………………………….
…………………………………………………………………….
…………………………………………………………………….
…………………………………………………………………….
…………………………………………………………………….
…………………………………………………………………….

**8.2 கம்பெனி/ஒழுங்கமைப்பு:**

*அறியப்பட்டிருப்பின், பெயர், கூட்டிணைக்கப்பட்ட இடம், கூட்டிணைக்கப்பட்ட திகதி, முகவரி(கள்), பணிப்பாளரின்/ அதிபரின்/கட்டுப்பாட்டாளரின் விபரங்கள் உள்ளடங்கலாகவும் அலுவலரின் அடையாளம் காணுதல் தகவல், முழுப்பெயர், தலையங்கம்/பதவி, முகவரி, வரலாறு உள்ளடங்கலாகவும்*

கோரிக்கையுடன் சம்பந்தப்பட்ட கம்பெனி அல்லது ஒழுங்கமைப் பின் அடையாளம் காணல் பற்றிய தகவல்களை வழங்கவும். [இடம் போதியதற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக் களை வழங்கவும்.]

………………………………………………………………
………………………………………………………………
………………………………………………………………
………………………………………………………………
………………………………………………………………
………………………………………………………………

**9. பின்வரும் விபரங்கள் உள்ளடங்கலாக எல்லா இயைபான நிகழ்வு களின் குறுகிய சுருக்கம் ஒன்றை வழங்கவும்-**

- சம்பந்தப்பட்ட ஆட்களை கைதுசெய்தல், குற்றஞ் சாட்டுதல் அல்லது குற்றத் தீர்ப்பளித்தலுக்கு இட்டுச்செல்பவை
- ஏதேனும் தடைசெய்தல் அல்லது இழப்பித்தல் கட்டளையை ஆக்கு வதற்கு இட்டுச்செல்பவை
- சான்றுசார் நோக்கங்களுக்காக ஆதனத்தின் ஏதேனும் கைப்பற்று கைக்கு இட்டுச்செல்பவை
- பிரச்சினையில் உள்ள குற்றவியல் நடத்தையின் சம்பந்தம் மற்றும் கோரப்பட்ட உதவியை சுட்டிக்காட்டுபவை
- கோரிக்கையை நிறைவேற்றுதல் வழக்கின் விளைவுகளுக்கு எவ்வாறு பங்களிக்கும் என்பதை தெளிவாகக் காட்டுபவை
- வேறு ஏதேனும் தகவல்

[இடம் போதியதற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]

………………………………………………………………………
………………………………………………………………………
………………………………………………………………………
………………………………………………………………………
………………………………………………………………………
………………………………………………………………………

**10. தோதாகவிருப்பின், பின்வருவன உள்ளடங்கலாக வழக்கின் தற்போதைய நிலைமை பற்றிய குறுகிய சுருக்கமொன்றை வழங்கவும்:**

- புலனாய்வுகள் (தொடங்கப்பட்டவை, தொடரப்படுகின்றவை, முடிவுற்றவை)
- இயைபான ஆதனங்கள் (தடைசெய்யப்பட்டவை, முடக்கப்பட்டவை, கைப்பற்றப்பட்டவை, பறிமுதல் செய்யப்பட்டவை)
- கைது செய்தல்கள் (திகதி, ஆணைப்பத்திரங்கள் முதலியன)
- விதிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள்
- குற்றவழக்கு (தொடங்கப்பட்டவை, தொடரப்படுகின்றவை, முடிவுற்றவை)
- விளக்கம் (தொடங்கப்பட்டவை, தொடரப்படுகின்றவை, முடிவுற்றவை)
- குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவை /கண்டனம் தெரிவிக்கப்பட்டவை மற்றும் திகதி
- மேன்முறையீடு (கள்)

- வேறு ஏதேனும் தகவல்கள்
[இடம் போதியதற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

**11. அவசர தன்மை:**

**11.1 கோரிக்கை அவசரமானதா? (ஆம்/இல்லை)***
*ஏற்புடையதற்றதை நீக்கிவிடுக.

**11.2 அவசர தன்மைக்கான காரணத்தை (காரணங்களை) வழங்கவும் அத்துடன் இயைபான கடைசித் திகதிகளை வழங்கவும்:**
[இடம் போதியதற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

**12. கோரிக்கையை செய்முறைப்படுத்துவதற்கு வேறு ஏதேனும் குறிப்பிட்ட தகவலை வழங்கவும்:**
[இடம் போதியதற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]
……………………………………………………………

**13. பின்னிணைப்புக்களின் நிரல் :**
[இடம் போதியதற்றதாகவிருப்பின், அவசியமான இணைப்புக்களை வழங்கவும்.]
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

**14. அறிவுறுத்தல்கள்:**

(1) ஆங்கிலத்தில் அனுப்பப்படவேண்டிய ஆவணங்களின் மொழிபெயர்ப்புக்கள், சத்திய பிரமாணம் செய்த அல்லது அதிகாரமளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர் ஒருவரினால் மொழிபெயர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) ஆவணமொன்று-

(அ) முறையான நாடொன்றில் உள்ள அல்லது முறையான நாட்டின் நீதிபதியொருவரினால், நீதிவானினால் அல்லது அலுவலரினால் கையொப்பமிடப்பட்டிருப்பின் அல்லது சான்றுபடுத்தப்பட்டிருப்பின்; அத்துடன்

(ஆ) சாட்சியொருவரின் அல்லது முறையான நாட்டின் அரசாங்கத்தின் அலுவலர் ஒருவரின் சத்தியத்தின்மூலம் மெய்யென உறுதிப்படுத்தப்பட்டிருப்பின் அல்லது முறையான நாட்டின் அல்லது முறையான நாட்டின் அரசாங்கத்தின் அரச அமைச்சரின் அல்லது திணைக்களம் ஒன்றின் அல்லது அலுவலர் ஒருவரின் அலுவலகமுறையான அல்லது பொது இலச்சினை மூலம் இலச்சினையிடப்பட்டிருப்பின்,

முறையாக மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) எல்லா ஆவணங்களும், சுருக்கமாகவும் இலகுவாக விளங்கப்படத் தக்கவானமுறையிலும் இருத்தல் வேண்டும்.

**15. வெளிப்படுத்துகை:**

**............................ ஆகிய நான்** (முழுப்பெயர்) **இக்கோரிக்கையை .................... ஆந் (தேதியன்று) ............................ இல்** (நாடு) **................................ (குறியீட்டைக்) கொண்ட ..................... என்னுமிடத்தில்** (நகரம்/ இடம்) **எனக்கு நேரடியாக/ தோதான அதிகாரி என்ற முறையில் எனக்குரித்தாக்கப்பட்ட அத்தகைய கோரிக்கைகளைச் செய்வதற்கான தத்துவங்களின்கீழ் கையொப்பமிடுகின்றேன்.***

......................
**கையொப்பம்**
**குறித்துரைக்கப்பட்ட நாடு/ஒழுங்கமைப்பின்**
**தோதான அதிகாரி**

......................
**அலுவலகமுறையான இலச்சினை**

*ஏற்புடையதற்றதை நீக்கிவிடுக.".

**23.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்.